செய்தி வெளியீடு எண். 26-2017 நாள்: 11.07.2017

**விழுப்புரம் மாவட்டம் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெற தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

*****

தமிழ்நாட்டில் மைய அரசால் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ள இஸ்லாமியர், கிறித்துவர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்ஸி மற்றும் ஜைன மதத்தை சார்ந்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் மைய/மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் 2017-18ம் கல்வியாண்டில் ஒன்று முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு பள்ளி படிப்பு கல்வி உதவித் தொகை, 11ம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை (ஐடிஐ, ஐடிசி, வாழ்க்கை தொழிற்கல்வி, பாலிடெக்னிக், செவிலியர் /ஆசிரியர் பட்டைய படிப்பு, இளங்களலை, முதுகலை பட்டப்படிப்பு உட்பட) பயில்பவர்களுக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகையும் மற்றும் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயில்பவர்களுக்கு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை பெறுவதற்கு மத்திய அரசின் www.scholarships.gov.in என்ற தேசிய கல்வி உதவித்தொகை இணைய தளத்தில் ஆன்லைன் மூலம் வரவேற்கப்படுகின்றன. கல்வி உதவித்தொகை மாணவ, மாணவியர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

பள்ளி படிப்பு கல்வி உதவித்தொகைக்கு மாணவ மாணவியர்கள் புதிதாக விண்ணப்பிக்க கடைசி நாள் 31.08.2017, புதுப்பிப்பதற்கு கடைசி நாள் 31.07.2017, போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கு மாணவ, மாணவியர்கள் புதியதாக விண்ணப்பிக்க கடைசி நாள் 31.08.2017, புதுப்பிப்பதற்கு கடைசி நாள் 31.07.2017.

மேற்படி கல்வி உதவித்தொகை திட்டங்கள் தொடர்பான விரிவான விளம்பரம், http://www.bcmbcmw.tn.gov.in/welfschemes_minorities.htm என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பான வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கு http://www.minorityaffairs.gov.in/schemesperformance/schemes என்ற இணை தளத்தை காணலாம்.

சிறுபான்மையின மாணவ மாணவியர்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரிய காலத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.